உயர்கல்வித் (கே2) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

<u>கடித (நிலை) எண் 189 , நாள். 23.09.2022.</u>

அனுப்புநர்
முனைவர். தா. கார்த்திகேயன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
உயர் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்துப் பல்கலைக்கழகப் பதிவாளர்கள்.

ஐயா / அம்மையீர்,

பொருள் உயர் கல்வி – பல்கலைக்கழகங்கள் – அனைத்து வகை இளங்கலை பட்டப்படிப்புகளுக்கும் இரண்டாம் வருட பருவத் தேர்வில் தமிழ் மொழி பாடத்தினை சேர்த்தல் – நெறிமுறைகள் வெளியிடுதல் – குறித்து.

பார்வை கடித (நிலை) எண் 162 உயர் கல்வி (கே2) துறை நாள் 22.08.2022.

...... .... ......

பார்வையில் காணும் அரசு கடிதத்தின் தொடர்ச்சியாக உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு பின்வரும் அறிவுறுத்தல்கள் வெளியிடப்படுகிறது :–

i) உயர் கல்வித் துறையின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்களில் பாரதிதாசன், அன்னை தெரசா மகளிர் மற்றும் பெரியார் பல்கலைக்கழகம் தவிர மற்ற பல்கலைக்கழகங்களில் B.Com/ B.B.A. / B.C.A. பாடப்பிரிவுகளுக்கு நடத்தப்படும் இரண்டாம் ஆண்டு பருவத் தேர்வுகளில் தமிழ் மொழி பாடத் திட்டம் இடம் பெறவில்லை. எனவே, அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஒரே மாதிரியான நடைமுறையை பின்பற்றும் பொருட்டு, மேற்கண்ட இளநிலை (UG) பட்டப்படிப்புகளுக்கு நடத்தப்படும் இரண்டாம் ஆண்டு பருவத் தேர்வுகளில் தமிழ்மொழி பாடத்திட்டத்தினை சேர்த்து <u>இனிவரும் பருவத் தேர்வுகளில்</u> தவறாமல் நடைமுறைப்படுத்த ஏதுவாக உரிய நடவடிக்கையினை எடுக்குமாறு அனைத்துப் பல்கலைக்கழக பதிவாளர்களும், கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ii) இதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரத்தை அரசுக்கு உடன் அனுப்புமாறும் அனைத்து பல்கலைக்கழகப் பதிவாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

23/09/2022

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

23/09/22